## இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனம்

# வருடாந்த அறிக்கை
# 2018

## தமிழ்

## நோக்கு

சரியான மற்றும் நியாயமான வெற்றிக்காக போதையற்ற இலங்கை விளையாட்டிற்குச் சக்தியூட்டல்.

## பணிக்கூற்று

உலக போதைப்பொருள் தடுப்புச் சட்டம் மற்றும் இதன் ஒழுங்கு விதிகளுக்கமைய 2013 இலக்கம் 33 கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தை அமுல்படுத்தல்.





**தலைவரின் வாழ்த்துச்செய்தி**

விளையாட்டு என்பது பொழுதுபோக்கிற்கான ஒரு செயற்பாடாக மட்டுமல்லாது மனிதர்களின் ஆரோக்கியத்தையும் , நல்லொழுக்கங்களையும் அனுபவங்களையும் வாழ்க்கைக்கு சேர்த்துக்கொள்ள உதவுகிறது. மற்றும் பல்வேறு இன மற்றும் மத குழுக்களின் சகவாழ்வுக்கு உதவுகிறது. ஆனால் காலப்போக்கில் படிப்படியாக இன்றைய சமுதாயம் முன்னேறிவருகையில் விளையாட்டு என்ற தொனிப்பொருள் வணிகமயமாகுவதையும் வெற்றியை மாத்திரமே இலக்காகக் கொண்டு செயற்படுவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

தற்போது தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் இயங்கிவரும் இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனமானது ஸ்தாபிக்கப்பட்டு தற்போது ஐந்து ஆண்டுகள் கழிந்துள்ளது. கடந்த ஐந்து வருடங்களாக இந்நிறுவனமானது இலங்கை விளையாட்டுத்துறையின் தரத்தை மேம்படுத்துவதற்காக வழங்கிய பங்களிப்பானது அளப்பறியதாகும். அத்துடன் இதன்மூலம் பெற்றக்கொண்ட உந்துசக்தியானது பல தசாப்பதங்களுக்கு சாதமான விளைவுகளை ஏற்படுத்தும்.

2018 ஆம் ஆண்டு முழுவதும் இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனமானது தமது வழமையான செயற்பாடுகளான ஊக்கமருந்து சோதனைகளை மேற்கொள்ளல், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச்சென்றுள்ளது. 2018 ஆம் ஆண்டில் இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனமானது 280 ஊக்கமருந்து சோதனைகளை மேற்கொண்டுள்ளது. அதற்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியான போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை வீர வீராங்கனைகளை இலக்காகக் கொண்டு எழுந்தமானமாக சிறுநீர் மற்றும் இரத்த மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

ஆண்டு தோறும் நாடளாவிய ரீதியில் பல்வேறு பிரதேசங்களையம் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் விளையாட்டு வீர வீராங்கனைகள்,பாடசாலை மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் அத்துடன் விளையாட்டு தொடர்பாக ஆர்வமுள்ள பெரும்பான்மையான மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆசிய மற்றும் சமுத்திர வலய நாடுகள் பலவற்றின் பங்கேற்புடன் வருடந்தோறும் இடம்பெற்றுவரும் “Asia Oceania Region Intergovernmental Ministerial Meeting on Anti – Doping in Sports” இனது 15 ஆவது மாநாடானது 2018 ஆம் ஆண்டில் இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வானது கொழும்பு ‘‘கிங்ஸ்பரி’’ ஹோட்டலில் 2018.06.18 மற்றும் 19 ஆகிய இரு தினங்களில் 27 நாடுகளுக்கான பிரதிநிதிகளின் பங்கேற்புடன் வெற்றிகரமாக இடம்பெற்றது. இது இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்திற்கான சிறந்த மைல் கல்லாக அமைந்தது. அதனைத்தொடர்ந்து தெற்காசிய பிராந்திய ஊக்கமருந்து தடுப்பு நிறுவனத்தின் (South Asian Regional Anti - Doping Organization) 2018 ஆம் அண்டுக்கான பணிப்பாளர் சபைக்கூட்டமானது 2018.06.20 மற்றும் 21 ஆகிய இரு தினங்களில் கொழும்பு ‘‘கிங்ஸ்பரி’’ ஹோட்டலில் வெற்றிகரமாக இடம்பெற்றது. இந்நிகழ்வுக்காக இவ்வலயத்தைச் சேர்ந்த ஐந்து அங்கத்துவ நாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் கட்டட வளாகத்தின் கட்டுமானப்பணிகள் 2018 ஆம் ஆண்டில் நிறைவடையும் தருவாயில் உள்ளது.டன் உயர்நிலை இராதந்திரிகளின் தலைமையின் கீழ் 2019 ஆம் ஆண்டு தொடக்கத்தில் அக்கட்டடமானது வைபவரீதியாக திறந்து வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறவனத்திற்கான ஆராய்ச்சிப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அது 2019 ஆம் ஆண்டில் நிறைவுசெய்து நாட்டின் எதிர்காலத்திற்கான பங்களிப்பை அதன்மூலம் வழங்குவதானது எமது எதிர்ப்பார்ப்பாகும். இவ்வாறான பௌதீக மற்றும் மனித வளங்கள் கிடைப்பதன் மூலம் நிறுவனத்தினது

பணிகளை முன்பிருந்ததைவிட வெற்றிகரமாக நிறைவேற்றக்கூடியதாக இருப்பதுடன் மிகவும் வினைத்திறனான மற்றும் பயனுள்ள வழியில் நேர்மையான விளையாட்டை ஊக்குவிக்கும் என பெருமிதத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

2018 ஆம் ஆண்டில் இரத்த மாதிரிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் ஊக்கமருந்து சோதனைகள் நடாத்தப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மேலும்,2019 ஆம் ஆண்டு முழுவதும் அதனை முன்னெடுத்துச்செல்ல எதிர்ப்பார்த்துள்ளோம்.

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் புதிய கட்டட வளாகத்தை நிர்மாணித்தல் மற்றும் ஆராய்ச்சிப்பிரிவை நிறுவுதல் போன்றவற்றை காரணங்களாகக் கொண்டு இதுரை ஆற்றிய சேவையை மேலும் தீவிரமாக எதிர்காலத்தில் ஆற்றக்கூடிய சந்தர்ப்பம் அமைவதுடன் , புதிய தொழிநுட்பம் மற்றும் புதிய முறைகள் போன்றவற்றை நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு உட்படுத்தி எம்மைப் புதுப்பித்துக்கொள்வதன் மூலம் சிறந்த சேவையை இலங்கையின் நேர்மையான விளையாட்டின் நலனிற்காக ஆற்றுவதற்கான சந்தர்ப்பம் அமைய வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் அர்ஜுன டி சில்வா**
**தலைவர்**



**பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச்செய்தி**

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு தற்போது ஐந்து ஆண்டுகள் கடந்துள்ளன. 2013 ஆம் ஆண்டின் பிற்பகுதி முதல் இன்றுவரையான காலப்பகுதிக்குள் எமது நிறுவனத்தினால் இலங்கையின் நேர்மையான விளையாட்டிற்காக ஆற்றப்பட்ட சேவை அளப்பறியது. விளையாட்டில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகளைத் தடுப்பதற்காக ஊக்கமருந்து சோதனைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கடந்த காலப்பகுதிக்குள் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டதோடு, அண்மைக்காலம் வரை சிறுநீர் மாதிரிகளை மாத்திரம் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வந்த ஊக்கமருந்து சோதனைகளுக்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டு முதல் இரத்த மாதிரிகளைப் பயன்படுத்தி ஊக்கமருந்து சோதனைகள் மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் எமக்கான பணிகளுள் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இதனைக் குறிப்பிடலாம்.

2018 ஆம் ஆண்டானது இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் ஒரு சிறப்பான ஆண்டாக அமைந்தது. ஏனெனில் “15 Asia Oceania Region Intergovernmental Ministerial Meeting on Anti-Doping in Sports “ மாநாட்டை ஏற்பாடு செய்யவும் மேலும் அம்மாநாட்டின்போது அவுஸ்திரேலிய ஊக்கமருந்து தடுப்பு அதிகாரசபையுடன் அறிவுத்திறன் மற்றும் மனித வள அபிவிருத்தி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவும் எம்மால் முடிந்தது. அதன்மூலம் 2018 ஆம் ஆண்டு நிறைவடைவதற்குள் அறிவுத்திறன் மற்றம் தொழிநுட்ப அறிவு சார்ந்த விடயங்களை பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருப்பதானது இலங்கை விளையாட்டுத்துறையைப் பொறுத்தரை நாம் எட்டிய சிறப்பான மைல் கல்லாகும் என்பதனை கூறுவதில் பெருமையடைகிறேன்.

கடந்த ஐந்து வருடங்களில் இந்நிறவனமானது அடைந்த வெற்றிகளை உந்துசக்தியாகக்கொண்டு எதிர்க்காலத்திற்கான பாரிய அடித்தளமொன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. எமது நிறுவனத்தின் அமலாக்கல் மற்றும் செயற்படுத்தல் பிரிவானது அதிகாரபூர்வமாக்கப்படுவதன் மூலம் பல்வேறு வழிகளில் இலங்கையை வந்தடையும் உணவுக்குறைநிரப்பிகள் மற்றும் மருந்துவகைகள் போன்றவற்றை தரப்படுத்தலுக்குட்படுத்தி கட்டுப்படுத்துதல் எமது பிரதான இலக்காகும். இதற்காக் ஏனைய சட்டபூர்வமான நிறுவனங்களான இலங்கை சுங்கம் மற்றும் தேசிய மருந்துகள் முறைப்படுத்தும் அதிகாரசபை போன்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து சட்டவிரோதமாக இந்நாட்டிற்கு கொண்டுவரப்படும் மருந்துவகைகள் மற்றும் உணவுக்குறைநிரப்பிகள் போன்றவற்றை கட்டுப்படுத்துவதற்கும் அதற்காக உரிய தரப்படுத்தலுக்குட்படுத்தி முறையான பொறிமுறையொன்று வரையறுக்கப்படுவதற்கும் எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவ்வாறு செயற்படாவிடின் இலங்கை விளையாட்டுத் துறைக்கும் எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியம் மற்றும் போசணைக்கும் ஏற்படக்கூடிய சேதமானது கொஞ்சநஞ்சமல்ல.

2018 ஆம் ஆண்டில் எமது நிறுவனத்தினால் விளையாட்டு வீர வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் வைத்தியர்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் “DR App” என்ற பெயரில் அன்ரொயிட் டிஜிட்டல் செயலியொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இதன்மூலம் விளையாட்டு வீர வீராங்கணைகள் தாம் உட்கொள்ளும் மருந்துவகைகள் மற்றும் போசணை குறைநிரப்பிகளில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் அடங்கியுள்ளனவா என்பதை பரிசீலனை செய்யகொள்ளமுடியும்.

2018 ஆம் ஆண்டில் எமது நிறுவனமானது ஜப்பான் ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்துடன் (JADA) தொழிநுட்ப அறிவை பகிர்ந்துகொண்டு அதன்மூலம் “Real Champion” என்ற தனித்துவமான நிகழ்ச்சியொன்று தயாரித்து வழங்கப்பட்டது. இதன்மூலம் ஆக்கபூர்வமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் ஊக்கமருந்து தடுப்பு தொடர்பான அறிவைப் பெருக்கிக்கொள்வதற்காக விளையாட்டில் ஆர்வம் காட்டும் இலங்கையர்க்கு சந்தர்ப்பம் கிட்டுவதோடு அதற்கான கருத்துக்கள் மற்றும் அறிவானது (Module) ஜப்பான் ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் உதவியுடன் பெற்றக்கொள்ளவதற்கு சம்மதம்

தெரிவித்தமையானது எமக்கு கிடைத்த பெறும் பாக்கியமாகக் கருதலாம்.

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்திற்ககான கட்டட வளாகமானது, சுகததாச விளையாட்ரங்கு வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருவதோடு , 2019 ஆம் ஆண்டு தொடக்கத்தில் வைபவரீதியாக திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், ஆராய்ச்சிப் பிரிவின் அனைத்துவித கட்டுமானப்பணிகளும் 2019 ஆம் ஆண்டுக்குள் நிறைவுசெய்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. இவ்வாறான பௌதீக மற்றும் மானிட வளங்கள் கிடைப்பதன் மூலம் இலங்கை விளையாட்டுத்துறைக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் பாராட்டத்தக்கது. அத்துடன் நிகழ்காலத்தைப்போன்று எதிர்காலத்திலும் இலங்கையின் நேர்மையான விளையாட்டுக்காக ஆற்றப்படும் அளப்பறிய சேவையானது தொடர வாழ்த்துகிறேன்.

**வைத்தியர் சீவலி ஜயவிக்ரம**

**பணிப்பாளர் நாயகம்**

## நோக்கம்

சட்டத்தின் II வது வாசகத்திற்கமைய :

முகவர் நிறுவனத்தின் நோக்கமாக அமைவது:

(அ) விளையாட்டுக்களில் ஈடுபடும் போது தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்பாட்டை ஒழிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

(ஆ) விளையாட்டுக்களுடன் தொடர்புபட்ட ஊக்கமருந்து பயன்பாடு தொடர்பான துறைகள் மற்றும் உரிய ஆராய்ச்சி உட்பட முகவர் நிறுவனத்திற்கு சமமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஏனைய சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர ரீதியில் பரிசோதனை செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

## சேவை

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனம் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கீழ் குறிப்பிட்ட சேவைகளை வழங்குகின்றது.

1. தேசிய, சர்வதேச மற்றும் பாடசாலை மட்டத்தில் விளையாட்டு வீர வீராங்கணைகளின் ஊக்கமருந்து பரிசோதனைகளை மேற்கொள்ளல்.
2. தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட விளையாட்டு வீரர்கள் தொடர்பில் ஒழுக்காற்று செயற்பாடுகளை மேற்கொள் ளல்.
3. தடை செய்யப்பட்ட பொருள் பயன்பாடு மற்றும் அதன் பாதக விளைவுகள் தொடர்பாக விளையாட்டு வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஏனைய விளையாட்டுத் துறையில் ஈடுபடுவோரை அறிவுறுத்தல்.
4. நாடு பூராகவும் மாவட்ட மட்டத்தில் UNESCO நிறுவனத்தின் நிதி உதவியுடன் விளையாட்டின் போது பயன்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகள் உட்பட அதன் பாதக விளைவுகள் மற்றும் தடை செய்யப்பட்ட பொருள் பரிசோதனை தொடர்பாக அறிவுறுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.
5. விளையாட்டில் ஈடுபடும் போது தடை செய்யப்பட்ட பொருள் பயன்பாடு தொடர்பாக பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துவதற்காக பாடசாலை பாடவிதானத்திற்கு இப் பிரிவினை இணைப்பதற்கான செயற்பாடுகளை வகுத்தல்.

# தற்போதைய பணியாளர் சபை



பேராசிரியர் அர்ஜுன டி சில்வா (தலைவர்)



பேராசிரியர் லால் ஜயக்கொடி



பேராசிரியர் ரவீந்திர பர்ணாண்டோ



திரு.சஜித் ஜயலால்



திரு.டி.முத்துகல



வைத்தியர்.அன்வர் ஹம்தானி



திரு.எஸ்.ஐ.எம்.ரோசா



திரு.சாமர.ஹேரத்



வைத்தியர.ஈ.ஏ.எல்.சீ.கே.எதிரிசிங்க



திரு.கே.பீ.சிறிபத்தன

# தற்போதைய பணியாளர் சபை



இடமிருந்து வலமாக

1. செல்வி. கே.ஆர்.கனகசபாபதி - மொழிபெயர்ப்பாளர்
2. திருமதி. எஸ்.ஏ.என்.ரஸானி - ஆராய்ச்சி உத்தியோகத்தர்
3. திருமதி.ஆர்.எம்.ஆர்.குணவர்த்தன - சட்ட உத்தியோகத்தர்/பணிப்பாளர் சபை செயலாளர்
4. திரு. ஜீ. நிஸான் பர்ணாண்டோ - நிர்வாக உத்தியோகத்தர்
5. திரு. எச்.எம் சீ.ஜீ தயாரத்ன - கணக்காளர்
6. வைத்தியர்.சீவலி ஜயவிக்ரம - பணிப்பாளர் நாயகம்
7. வைத்தியர்.எஸ்.பீ.பீ.டி.அல்விஸ் - பணிப்பாளர்
8. திருமதி ஏ.எஸ்.ஏ.டி. பிகேரா - ஆராய்ச்சி உத்தியோகத்தர்
9. செல்வி. வை.ஏ.யு. மேதாவி - தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்
10. திருமதி. பி.என்.ஜி.பர்ணாண்டோ - ஆராய்ச்சி உத்தியோகத்தர்

# நமதுபணியாளர்களின் விபரங்கள்- 2017



வைத்தியர். சீவலி ஜயவிக்ரம
பணிப்பாளர் நாயகம்



வைத்தியர். எஸ்.பீ.பீ.டி.
அல்விஸ் பணிப்பாளர் (கல்வி
மற்றும் பரிசோதனை)



சட்டத்தரணி ருவந்திக்கா
குணவர்த்தன சட்ட
உத்தியோகத்தர் / பதவி
நிலைச் செயலாளர்



திரு. எச்.எம்.சி.ஜி. தயாரட்ன

கணக்காளர்



திருமதி.ஏ.எஸ்.ஏ.டி.பிகேரா

ஆராய்ச்சி உத்தியோகத்தர்



திருமதி.எஸ்.ஏ.என்.ரஸானி

ஆராய்ச்சி உத்தியோகத்தர்



பீ.நிலு பர்ணாண்டோ

ஆராய்ச்சி உத்தியோகத்தர்



திரு. ஜி. நிசான் பர்ணாண்டோ

நிர்வாக உத்தியோகத்தர்



செல்வி.வை.ஏ.யு.மேதாவி

தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்



செல்வி.கே.ஆர்.கனகசபாபதி

மொழிபெயர்ப்பாளர்



திருமதி.எஸ்.எஸ்.கே.தோமஸ்

அபிவிருத்திஉத்தியோகத்தர்



திரு.பீ.ஜீ.எம்.ஐ.அருணகுமார

அபிவிருத்திஉத்தியோகத்தர்



திருமதி.எஸ்.சூரியராணி

அபிவிருத்தி உத்தியோகத்தர்



செல்வி என்.ஜீ.எஸ்.எச் விஜயரட்ண

முகாமைத்துவ உதவியாளர்



செல்வி எம்.ஜீ.டீ.டி சேனாரத்ன

முகாமைத்துவ உதவியாளர்



திரு டபிள்யு.எம்.எஸ்.கே விக்ரம சிங்க

முகாமைத்துவ உதவியாளர்



திரு எம்.ஜி.எஸ்.ஐ கருணாதிலக

முகாமைத்துவ உதவியாளர்



திரு.கே.பி.சி. பிரேமரட்ண
அலுவலக வாகனசாரதி



திரு.கே.எம்.எல் வெவேதென்ன
அலுவலக வாகன சாரதி



திரு.ஏ.ஐ.ஆர்.சேனாரத்ன
அலுவலக வாகன சாரதி



திரு.ஏ.ஜி.எல்.கே.எஸ்.குணவர்த்தன அலுவலக உதவியாளர்



திரு.ஏ.பி.பி.டி.திலகரட்ண
அலுவலக உதவியாளர்



திரு.எம்.டி.ஆர்.டி.ஜயவீர
அலுவலக உதவியாளர்



செல்வி.டப்ளியு.டி.சாதுர்யா
லஹிருணி.

பயிலுனர்

# இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனம்

விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிராக சர்வதேச இணக்கப்பாட்டினை அமுல்படுத்தும் வகையில் ஊக்கமருந்து ஒழிப்பு முகவர் நிறுவனம் இலங்கையில் தாபிக்கப்பட்டதன் மூலம் இதன் இணக்கப்பாட்டினை இலங்கையில் அமுல்படுத்துவதற்காக பல்வேறுபட்ட ஒழுங்கு விதிகளை வகுக்கும் வகையிலும் மேற்கூறப்பட்ட இணக்கப்பாட்டுக் கோட்பாட்டிற்குள் விளையாட்டில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிராக செயற்படுவதற்காக உரிய உள்நாட்டு சட்ட ரீதியிலான ஒழுங்கு விதிமுறைகளை உரியவாறு குறிப்பிடுவது தொடர்பில் ஒழுங்கு விதிமுறைகளை வகுக்கும் வகையில் 2013 இலக்கம் 33 கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டம் 2013 செப்ரெம்பர் 09 ஆம் திகதி தயாரிக்கப்பட்டது.

2013 இலக்கம் 33 கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் மூன்றாவது பகுதி மூலம் இலங்கையில் ஊக்கமருந்து ஒழிப்பு முகவர் நிறுவனத்தை தாபிப்பது தொடர்பான ஒழுங்கு விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களில் ஆராய்ச்சிப் பிரிவு முன்னணிப் பிரிவாக செயற்படுகின்றது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது ஊக்கமருந்து பயன்பாட்டின் போது மற்றும் ஊக்கமருந்து பரிசோதனைகளின் புதிய முன்னேற்றங்களை இனங்காணுதல், இலங்கையில் மேற்கொள்ளும் ஊக்கமருந்து பரிசோதனைகளை சர்வதேச மட்டத்தில் பேணுதல் போன்றவாகும். அத்துடன் உள்நாட்டு வைத்திய முறைக்கு முன்னுரிமை வழங்கும் இலங்கை போன்ற நாடுகளில் இம் மருந்து வகைகளில் உள்ளடங்கும் உள்ளீடுகள் மற்றும் அவற்றில் தடை செய்யப்பட்ட பதார்த்தங்கள் அடங்கியுள்ளனவா என்பது குறித்து கண்டறிவதற்காக ஆராய்ச்சிகளில் ஈடுபடுவது இதன் பிரதான நோக்கங்களில் அடங்குகின்றன.

தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்பாடு மற்றும் இதன் பாதக விளைவுகள் இலங்கையை பொறுத்தவரை புதிய தலைப்பாகவே உள்ளது. இதனால் பொது மக்கள் மற்றும் விளையாட்டில் ஈடுபடுவோருக்கு இடையிலும் ஊக்கமருந்து பயன்பாடு தொடர்பாக சரியான விளக்கங்கள் இல்லை இதனால் இது தொடர்பில் பொது மக்களை அறிவுறுத்தும் பாரிய பொறுப்பும் எமது நிறுவனத்திற்கு உள்ளது. எனவே யுனெஸ்கோ நிறுவனத்தின் நிதி உதவியுடன் நாடு பூராகவும் அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்படுவதுடன் இதற்கு மேலதிகமாக அவ்வவ் விளையாட்டுக்களில் ஈடுபடுவோருக்காகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பாடசாலை மட்டத்திலும் உரிய வேலைத்திட்டங்களை நடாத்த திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்பாட்டின் மூலம் குறுகிய கால வெற்றியினை பெற்றுக் கொள்ள இலகுவான வழிமுறையாக காணப்பட்ட போதிலும் இம்முறையானது காலப்போக்கில் மனித உடலுக்கு பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. நீண்ட கால ஊக்கமருந்து பயன்பாட்டின் ஊடாக விளையாட்டு வீரர்களின் மரணம் கூட சம்பவிக்கக்கூடும். இதனால் இந்த பேரழிவிலிருந்து விளையாட்டு மற்றும் விளையாட்டு வீரர்களை மீட்டெடுப்பதற்காக பாரிய பணிகள் இந் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இது சமூக பேரழிவாக மாற்றமடைவற்கு முன்னர் தடை செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்துவோரை விளையாட்டிலிருந்து வெளியேற்றுவது இந்நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும்.

நாட்டை பிரதி நிதித்துவப்படுத்தும் எந்தவொரு விளையாட்டு வீரரும் ஊக்க மருந்தினை பயன்படுத்தி இருப்பதாக உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் நாட்டின் கீர்த்திக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் சிறிதளவல்ல. இதனால் இந்த தவறான பயன்பாட்டை நாட்டிலிருந்து ஒழித்து இலங்கையின் அபிமானத்தை சர்வதேச ரீதியில் பாதுகாப்பது எமது நிறுவனத்தின் அடிப்படை நோக்கமாகும்.

# பணியாளர் சபைத் தகவல்கள்

முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் இலங்கை தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்திற்கு 27 பேரைக் கொண்ட பணியாளர் சபை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

| | பதவிப் பெயர் | சம்பள அளவு | பதவிகளின் எண்ணிக்கை | தற்போதைய ஊழியர் எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| **01.** | பணிப்பாளர் நாயகம் | HM 2-1 | 01 | 01 | - |
| **02.** | பணிப்பாளர் | HM 1-1 | 02 | 01 | 01 |
| **03.** | உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் | MM 1-1 | 02 | - | 02 |
| **04.** | கணக்காளர் | MM 1-1 | 01 | 01 | - |
| **05.** | சட்ட உத்தியோகத்தர்/ பணிப்பாளர் சபை செயலாளர் | MM 1-1 | 01 | 01 | - |
| **06.** | நிர்வாக உத்தியோகத்தர் | JM 1-1 | 01 | 01 | - |
| **07.** | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | AR 1 | 03 | 03 | - |
| **08.** | மொழி பெயர்ப்பாளர் | MA-4 | 01 | 01 | - |
| **09.** | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | JM 1-1 | 01 | 01 | - |
| **10.** | அபிவிருத்தி உத்தியோகத்தர் | MA 3 | 03 | 03 | - |
| **11.** | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-1 | 04 | 04 | - |
| **12.** | சாரதி | PL 3 | 04 | 03 | 01 |
| **13.** | அலுவலக உதவியாளர் | PL 1 | 03 | 03 | - |
| | மொத்தம் | | **27** | **23** | **04** |

# நிறுவனஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



**ஊக்கமருந்து கட்டுப்பாட்டு பரிசோதனை-2018**

2018 ஆண்டின் தொடக்கத்திலிருந்து டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஊக்கமருந்து கட்டுப்பாட்டு பரிசோதனைகளின் சாராம்சம் பின்வருமாறு

| இலக்கம் | விளையாட்டு | பரிசோதனை எண்ணிக்கை | | ஊக்கமருந்து பாவனை உறுதிபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | 2017 | 2018 | 2017 | 2018 |
| 1. | ரக்பி | 38 | 47 | - | 02 |
| 2. | மெய்வல்லுனர் போட்டி | 63 | 125 | 01 | 01 |
| 3. | சைக்கிள் ஓட்டம் | 2 | 13 | - | 01 |
| 4. | பழு தூக்குதல் | 15 | 17 | - | - |
| 5. | குத்துச்சண்டை | 04 | 10 | - | - |
| 6. | கிரிக்கட் | - | 12 | - | - |
| 7. | நீச்சல் | 02 | 5 | - | - |
| 8. | உடற்கட்டமைப்பு | 03 | 3 | 02 | - |
| 9. | பெட்மின்டன் | - | 2 | - | - |
| 10. | வலு தூக்குதல் | 04 | 12 | 02 | 02 |
| 11. | ஜுடோ | - | 1 | - | - |
| 12. | துப்பாக்கிச்சுடுதல் | - | 2 | - | - |
| 13. | காற்பந்து | - | 6 | - | - |
| 14. | கபடி | - | 14 | - | - |
| 15. | பெரா | - | 3 | - | - |
| 16. | டெனிஸ் | - | 3 | - | - |
| 17. | மல்யுத்தம் | | 1 | | |
| | **மொத்தம்** | **134** | **276** | **05** | **06** |




- நான்கு (04) குருதிப் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.
- 2018 இல் பத்து (10) SARADO பரிசோதனைகள் நடாத்தப்பட்டன

குதிரைகளுக்கான பரிசோதனைகள் நடாத்தப்பட்டதுடன் அதன் சாராம்சம் பின்வருமாறு.

| இலக்கம் | விளையாட்டு | பரிசோதனை எண்ணிக்கை | ஊக்கமருந்து பாவனை உறுதிபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் |
|---|---|---|---|
| 01 | குதிரைப்பந்தயம் | 09 | - |
| | பரிசோதனைகள் | 09 | - |

## விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இக்கருத்தரங்குகள் விளையாட்டு வீர வீராங்கணைகள்,பயிற்சியாளர்கள், விளையாட்டு தொடர்பான முகாமையாளர்கள், வீர வீராங்கணைகளின் பெற்றோர் மற்றும் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுள்ளோரை குறிக்கோளாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. இதன்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையில் இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்பான சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | இடம் | யாருக்காக | பங்குபற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 10.01.2018 | பொரல்லை ரோயல் கொல்ப் கழகம் | ரோயல் கொழும்பு கொல்ப் கழகம் | 27 |
| 11.01.2018 | இலங்கை மன்றம் | விளையாட்டு இயன்முறையாளர்கள் மற்றும் பௌதீக சிகிச்சை உதவியாளர்களுக்கான சான்றிதழ் பாடநெறி | 70 |
| 18.01.2018 | இலங்கை மன்றம் | உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளர்கள் | 82 |
| 18.01.2018 | இலங்கை மன்றம் | விளையாட்டு இயன்முறையாளர்கள் மற்றும் பௌதீக சிகிச்சை உதவியாளர்களுக்கான சான்றிதழ் பாடநெறி | 70 |
| 23.01.2018 | இலங்கை மெய்வல்லுனர் சங்கம் | பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் கனிஷ்ட வீர வீராங்கணைகள் | 6 |
| 24.01.2018 | விளையாட்டுத்துறை அமைச்சு கேட்போர்கூடம் | பாடசாலை மாணவர்கள் மற்றம் நிறுவனங்கள் | 45 |
| 24.01.2018 | பெட்மின்டன் கூட்டமைப்பு | 2018 பொதுநலவாய விளையாட்டுகளுக்காக தெரிவாகிய பட்மின்டன் வீரர்கள் | 5 |
| 26.01.2018 | டொரிங்டன் | கராட்டேவிற்கான ஆசிய விளையாட்டுகள் மற்றும் ஆசிய முதன்மை ஆட்டத்திற்கான குழாம் | 10 |
| 08.02.2018 | தங்கும் விடுதியின் உணவகம் | தேசிய வளைப்பந்தாட்டக் குழாம் | 28 |
| 20.02.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | கனிஷ்ட மெய்வல்லுனர் குழாம் | 22 |
| 22.02.2018 | துப்பாக்கிசுடும் போட்டிக்கான கூட்டமைப்பு | 2018 பொதுநலவாய போட்டிகளில் துப்பாக்கிசுடும் போட்டிக்கு தெரிவாகிய குழாம் | 3 |
| 23.02.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | பாடசாலை ரக்பி பயிற்சியாளர்கள் | 43 |
| 24.02.2018 | சீனிகமை, ஹிக்கடுவை | Foundation of Goodness | 115 |

| | | | |
|---|---|---|---|
| 26.02.2018 | ரோயல் கல்லூரி ரக்பி மைதானம் | ரோயல் கல்லூரி ரக்பி அணி | 33 |
| 09.03.2018 | டொரிங்டன் | பொதுநலவாய போட்டிகளில் பங்குபற்றும் தடகளடீபாட்டிகளுக்கான அணி | 4 |
| 13.03.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | BORNEO 7's போட்டிகளில் பங்குபற்றும் ஆண்களுக்கான ரக்பி அணி | 12 |
| 13.03.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | BORNEO 7's போட்டிகளில் பங்குபற்றும் ஆண்களுக்கான ரக்பி அணி | 10 |
| 29.03.2018 | தங்கும் விடுதியின் உணவகம் | பொதுநலவாய போட்டி மல்யுத்தக் குழாம் | 3 |
| 02.04.2018 | பொரல்லை கொல்ப் அணி | தேசிய கனிஷ்ட கொல்ப் குழாம் | 20 |
| 04.04.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | தேசிய பெண்கள் கபடி அணி | 23 |
| 03.05.2018 | தேசிய காற்பந்து பயிற்சி மையம்- பதுளை | இலங்கை தேசிய காற்பந்து அணி | 40 |
| 16.05.2018 | இலங்கை பட்மின்டன் கூட்டமைப்பு | தேசிய பட்மின்டன் குழாம் | 6 |
| 17.05.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | தேசிய வில்வித்தை குழாம் | 14 |
| 31.05.2018 | தங்கும் விடுதியின் உணவகம் | கனிஷ்ட மெய்வல்லுனர் வீர வீராங்கணைகள் | 7 |
| 03.06.2018 | மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவனம் | கனிஷ்ட தடகள போட்டி குழாம் | 14 |
| 25.06.2018 | கெட்டம்பே மைதானம் | இனுடைய Tracy இனால ஏறபாடு செய்யப்பட்ட Elite Summer Swimming Camp with Liam Ceylon Tours | 21 |
| 05.07.2018 | டொரிங்டன் - ஹொக்கி மைதானம் | 2018 இந்தோனிய ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் தேசிய ஹொக்கி குழாம் | 24 |
| 06.07.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | 2018 பொதுநலவாய விளையாட்டுகளுக்காக ஆண்கள் கபடி அணி | 15 |
| 06.07.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | விளையாட்டின்போது ஏற்படும் காயங்கள் தொடர்பான முகாமைத்துவ பாடநெறி பங்கேற்பாளர்கள | 25 |
| 09.07.2018 | இலங்கை பட்மின்டன் கூட்டமைப்பு | ஆசிய கனிஷ்ட முதன்மை போட்டிக்கான பங்கேற்பாளர்கள் | 10 |
| 12.07.2018 | கண்டி திரித்துவக் கல்லூரி | புாடசாலை மாணவர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் | 55 |
| 15.07.2018 | இலங்கை கிரிக்கட் நிறுவனம் | 19 வயதுக்குட்பட்ட குழாம் | 31 |
| 24.07.2018 | இலங்கை மெய்வல்லுனர் | பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் வீர | 17 |

| | | | |
|---|---|---|---|
| | சங்கம் | வீராங்கணைகள் | |
| 25.07.2018 | புனாகொடை இராணுவ முகாம் | இயன்முறையாளர்கள் | 60 |
| 30.07.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | ஆசிய விளையாட்டுப் போட்டி குத்துச்சணடை குழாம் | 6 |
| 31.07.2018 | ரக்பி சங்கம் | 20 வயதுக்குட்பட்ட தேசிய குழாம் | 19 |
| 31.07.2018 | மாத்தறை பிரதேச செயலகம் | உடற்பயிற்சி ஆசிரியர்கள் , பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் | 185 |
| 05.08.2018 | தேசிய ஒலிம்பிக் குழு | 1வது விளையாட்டு முகாமைத்துவ பாடநெறி 2018 | 43 |
| 07.08.2018 | களனிப் பல்கலைக்கழக உடற்பயிற்சிக்கூடம் | 2018 ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான டய்கொண்டோ குழாம் | 7 |
| 08.08.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான பேஸ்போல், படகோட்டம் மற்றும் படகுசவாரிக்கான குழாம் | 24 |
| 10.08.2018 | டெனிஸ் சங்கம் | ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான டெனிஸ் குழாம் | 6 |
| 13.08.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான படகோட்டுதல் , நீச்சல் மற்றும் மாற்றுத்திறன் வீரர்கள் குழாம் | 29 |
| 14.08.2018 | ரக்பி சங்கம் | ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான ரக்பி குழாம் | 10 |
| 16.08.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான வளைப்பந்தாட்டக் குழாம் | 8 |
| 17.08.2018 | இலங்கை மன்றம் | உடற்பயிற்சி மைய பயிற்றுவிப்பாளர்கள் | 82 |
| 20.08.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான கராட்டே குழாம் | 5 |
| 21.08.2018 | ஹில்டன் ஹோட்டல் | உள்நாட்டு கிரிக்கட் வீரர்கள் , பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் | 71 |
| 29.08.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனத்தின் விளையாட்டு விஞ்ஞானத்துறை டிப்ளோமா மாணவர்கள் | 56 |
| 30.08.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனத்தின் விளையாட்டு விஞ்ஞானத்துறை டிப்ளோமா மாணவர்கள் | 52 |
| 30.08.2018 | சாந்த பீட்டர் கல்லூரி | பாடசாலை மாணவர்கள் | 38 |
| 10.09.2018 | ரக்பி சங்கம் | தேசிய ரக்பி பெண்கள் அணி | 15 |
| 19.09.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | இளைஞர் ஒலிம்பிக் போட்டிக்கான கூடைப்பந்தாட்ட அணி | 8 |
| 25.09.2018 | இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டு சங்கம் | பயிற்சியாளர்கள் | 27 |
| 27.09.2018 | தேசிய விளையாட்டு | இளைஞர் ஒலிம்பிக் போட்டி | 07 |

| | | | |
|---|---|---|---|
| | விஞ்ஞானத்துறை நிறுவனம் | பங்கேற்பாளர்கள் | |
| 27.09.2018 | இலங்கை பட்மின்டன் கூட்டமைப்பு | 17 மற்றும் 15 வயதுக்குட்பட்ட ஆசிய விளையாட்டுப்போட்டி பங்கேற்பாளர்கள் | 25 |
| 30.09.2018<br>10.10.2018 | கம்பஹா ஸ்ரீ போதி கேட்போர் கூடம்<br>தேசிய வியாபார மற்றும் முகாமைத்துவ நிறுவனம் | மேல் மாகாணத்தைச் சேரந்த விளையட்டு வீர வீராங்கணைகள்<br>தேசிய வியாபார மற்றும் முகாமைத்துவ நிறுவன மாணவர்கள் | 12<br>80 |
| 18.10.2018 | விசேட படைப்பிரிவு தலைமை காரியாலயம் | பொலிஸ் ரகர் குழாமிற்காக | 49 |
| 19.10.2018 | ரகர் யூனியன் | கனிஷ்ட ரகர் குழாம் | 16 |
| 22.10.2018 | ரகர் யூனியன் | Rugby 7's அணி | 8 |
| 29.10.2018 | இலங்கை பட்மின்டன் | கனிஷ்ட உலகக்கிண்ணப்போட்டியில் பங்குபற்றும் வீர வீராங்கணைகளுக்காக | 12 |
| 31.10.2018 | ரத்மலானை விமானப்படை தலைமை காரியாலயம் | விமானப்படை ரகர் அணி | 39 |
| 02.11.2018 | வெலிசரை கடற்படை தலைமை அலுவலகம் | கடற்படை ரகர் குழாம் | 57 |
| 07.11.2018 | ஹெவ்லொக் | டயலொக் லீக் போட்டியில் பங்குபற்றும் ஹெவ்லொக் ரகர் அணிக்காக | 24 |
| 07.11.2018 | CR &FC | ஏதிர்வரும் 2018/2019 க்கான டயலொக் ரக்பி லீக் போட்டியில் பங்குபெறவிருக்கின்ற CR&FC அணிக்காக | 13 |
| 28.11.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் | சைக்கிலோட்ட வீரர்களுக்காக | 35 |
| 28.11.2018 | ரகர் யூனியன் | ஆசிய கிண்ணப்போட்டியில் பங்குபற்றும் கனிஷ்ட ரகர் குழாம் | 40 |
| 05.12.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம் | வயம்ப பல்கலைக்கழக மாணவர்கள் | 35 |
| 16.12.2018 | டயலொக் தலைமை காரியாலய கேட்போர் கூடம் | Introductory Course for Match Commissioner | 20 |
| 18.12.2018 | ஏக்கலை விமானப்படை முகாம் | பழு தூக்கும் வீர வீராங்கணைகளுக்காக | 15 |
| 20.12.2018 | தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம | பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்காக கல்விசார் நிகழ்ச்சி (Hashima City Host Town Project) | |
| 31.12.2018 | இலங்கை கிரிக்கட் நிறுவனம் | 19 வயதுக்குட்பட்ட கிரிக்கட் வீரர்களின் பெற்றோருக்காக | 100 |
| **மொத்தம்** | | 72 | **2268** |

பொதுநலவாய போட்டிகளில் பங்குபற்றும் அதிக எண்ணிக்கையிலான விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு ஊக்கமருந்து தொடர்பான கல்வி வழங்கப்பட்டதுடன் ஊக்கமருந்து கட்டுப்பாட்டு பரிசோதனைகளும் நடாத்தப்பட்டன.

எமது கல்விசார் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக தேசிய குழாமைச் சேர்ந்த விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கான உணவுவிடுதியில் சுவரொட்டியொன்று பிரசுரிக்கப்பட்டது.

இது தவிர விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுடன் இணைத்து நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் பின்வருமாறு ஜப்பான் ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்துடன் இணைந்து நடாத்தப்படும் “Real Championship” நிகழ்ச்சி.








“WADA PLAY TRUE” வினாவிடை நிகழ்ச்சி

| திகதி | யாருக்காக | பங்குபற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 19/07/2018 | பழு தூக்குதல், மெய்வல்லுனர் போட்டி | 5 |
| 27/07/2018 | வூசு | 2 |
| 30/07/2018 | குத்துச்சண்டை | 6 |
| 1/8/2018 | மெய்வல்லுனர் போட்டி | 14 |
| 3/8/2018 | கபடி | 9 |

## கண்காட்சி – 2018

| இல. | திகதி | விளக்கம் |
|---|---|---|
| 1. | 06/09/2018- 09/09/2018 | பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற Sri Lanka Sports & Exercise Medicine Conference 2018 |
| 2. | 26/08/2018-27/08/2018 | மொனறாகலையில் இடம்பெற்ற “V 2025 Enterprise Sri Lanka” கண்காட்சி |
| 3. | 25/08/2018-26/08/2018 | பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற SportEx 2018 கண்காட்சி |
| 4. | 25/09/2018-28/09/2018 | கொழும்பு றோயல் கல்லூரியில் இடம்பெற்ற கல்வியியல் கண்காட்சி |

# “Outreach” நிகழ்ச்சி - 2018

| நிகழ்ச்சியின் பெயர் | திகதி | இடம் |
|---|---|---|
| தேசிய படகோட்டுதல் முதன்மைப் போட்டி | 20.04.2018 | தியகமை படகோட்ட அகாடமி |
| தெற்காசிய மெய்வல்லுனர் விளையாட்டுக்கான முதன்மைப் போட்டி | 26.04.2018 | சுகததாச விளையாட்டுத் தொகுதி |
| Olympians Run இல் பங்குபற்றிய பாடசாலை மாணவர்கள் , ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்க்ள் மற்றும் பொதுமக்கள் | 22.06.2018 | கண்டி கெட்டம்பே மைதானம் |
| இலங்கை வைத்திய சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட Annual Health Run & Walk இல் பங்குபற்றிய பாடசாலை மாணவர்கள் , ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் | 24.06.2018 | பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் |

தடைசெய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதற்காக பல்வேறு இடங்களில் நடாத்தப்பட்ட கண்காட்சிகளில் பங்கேற்றல்





இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர்கள் விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கான தடைசெய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான கருத்தரங்குகளை நடாத்துதல்

## கல்வி பாடவிதானம்

கல்வித்திட்டமானது பின்வரும் தலைப்புகளைக் கொண்டுள்ளது

1. ஊக்கமருந்து பாவனையின் வரலாறு
2. ஊக்கமருந்து தடுப்பு விதிகள்
3. WADA மற்றும் SLADA பற்றிய தகவல்
4. நெறிமுறை கருத்தாய்வு
5. தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல்
6. மருந்துவகைகளை பரிசீலித்தல்
7. விளையாட்டுகளில் பயன்படுத்தப்படும் போசணை குறைநிரப்பிகள்
8. சிகிச்சை முறை பாவனைக்கான விலக்கு (TUE)
9. இருப்பிடம் தொடர்பான தகவல்
10. ஊக்கமருந்து கட்டுப்பாட்டு சோதனைக்காக செயன்முறைகள்
11. விளையாட்டு வீர வீராங்கணைகளின் உயிரியல் கடவுச்சீட்டு
12. புலனாய்வு மற்றும் விசாரணை
13. ஊக்கமருந்து தடுப்பு விதி மீறல்கள்
14. ஊக்கமருந்து பாவனையின் காரணமாக ஏற்படக்கூடிய சுகாதார பாதிப்புகள்

## கற்றல் முறை

1. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் - a. அடிப்படை மட்டம்

   b. தலைப்புகள் தொடர்பான விழிப்புணர்வு

2. புரிந்துகொள்ளல் திறன்

   பாவனையாளர் விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாது பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்வார்.

3. செயற்படுத்துதல்

   இவ்அறிவுத்திறனானது முடிவுகளை எடுப்பதற்கு பயன்படுத்தப்படுவதுடன் ஒரு விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு வீரரை ஊக்குவிக்கும் நபர் என்ற வகையில் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதற்கு பயன்படும்.

## இயல்திறன் விருத்தி

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் பின்வரும் இயல்திறன் விருத்தி நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

- அலுவலக நடைமுறை மற்றும் செயல்திறன் விரிவாக்கம்
- சம்பள மேலாண்மை
- அடிப்படை வரிவதிப்பு
- ஏல விற்பனை தொடர்பான மதிப்பீடு மற்றும் அறிக்கைப்படுத்தல்
- நிலையான சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை கையாளுதல் மற்றும் பராமரித்தல்
- ஒழுக்காற்று விசாரணை நடைமுறை
- செலவு மற்றும் நடைமுறை கொடுப்பனவு
- விரிவான கொள்வனவு நடைமுறை
- களஞ்சியம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி
- வரிவிதிப்பு
- புதிய வரிவிதிப்பு சட்டம்
- இணையத்தள பாதுகாப்பு கருத்தரங்கு
- உள்ளக கணக்காய்வு தொடர்பான சான்றிதழ் பாடநெறி
- இயல்திறன் விருத்திக்கான திட்டமிடல்
- புதிய உள்ளக கணக்காய்வு சட்டம்
- சாரதிகளின் தொழில்சார் அறிவு விருத்தி
- ஒப்பந்த நிர்வாகம்

## 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான பௌதீக முன்னேற்றம்

### பிரதான அபிவிருத்தி கருத்திட்டங்கள்

### சுகததாச விளையாட்டுத் தொகுதி வளாகத்தில் 05 மாடிகளுடன் கூடிய இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவன தலைமை அலுவலக கட்டிடத்தை நிர்மாணித்தல்

தூய்மையான விளையாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்திற்காக 237 மில்லியன் ரூபாய் செலவிலான 05 மாடிக்கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக கௌரவ விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேக்கர அவர்களால் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டது.

இதற்கு இணையாக உள்ளக வடிவமைப்பு மற்றும் Landscaping பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது அவை இறுதிகட்டத்தை அடைந்துள்ளன.

| இல | விபரம் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.மி) | நிதி முன்னேற்றம்(ரூ.மி) 2018.12.31 | பௌதீக முன்னேற்றம்(ரூ.மி) 2018.12.31 |
|---|---|---|---|---|
| 01 | தலைமை அலுவலகக் கட்டிடம் | 211.00 | 172.83 | 99% |
| 02 | உள்ளக வடிவமைப்பு | 21.50 | 16.30 | 99% |
| | மொத்தம் | 252.50 | 85.00 | |

இக்கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளதுடன் 2019 ஆம் ஆண்டில் திறந்துவைப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்

### 2018 ஆம் ஆண்டு இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவன பணியாளர் குழுவில் இடம்பெற்ற மாற்றங்கள்

2018 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால்,இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்திற்கு , முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பப் பிரிவின் கீழ் இடம்பெறும் தொழிநுட்ப உதவியாளர் MA-2-1 பதவிக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இப்பதவியின் மூலம் புதிய காரியாலய வளாகத்தின் நலனைப் பராமரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்ப்பாரக்கப்பட்டுள்ளது. தற்போது , இப்பதவிக்கான ஆட்சேரப்புத் திட்டமானது தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில், 27 ஆகக் காணப்பட்ட அங்கீகாரம் பெற்ற பணியாளர் எண்ணிக்கையானது 2018 இல் 28 ஆக அதிகரித்துள்ளது.

## 2018 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான ஆராய்ச்சிப்பிரிவின் முன்னேற்ற அறிக்கை

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தினுடைய ஆராய்ச்சிப்பிரிவின் முதல் முயற்சியாக "Do common arista preparations manufactured in Sri Lanka contain Anabolic Androgenic Steroids(AAS), Stimulants or Ethanol ?" என்ற தலைப்பின் கீழ் வடிவமைக்கப்பட்டு, ஆய்வுகள் நடாத்தப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு மற்றும் முடிவுகளுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்திற்கு ஆய்வுகூடமொன்று இல்லாத காரணத்தால்,தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையுடன் இணைந்து இரசாயன பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வு தொடர்பான கண்டுபிடிப்புகள் ஒரு ஆய்வு சுருக்கமாக தயாரிக்கப்பட்டு SLMA வில் ஒரு இலத்திரனியல் சுவரொட்டியாக வெளியிடப்பட்டது.




- "A Descriptive Study of pharmaceutical agents, dietary supplements and herbal products taken by athletes in various sports categories in Sri Lanka" என்ற தலைப்பின் கீழ் இரண்டாவது ஆய்வானது வடிவமைக்கப்பட்டது. 390 இலங்கை விளையாட்டு வீரர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன.. இவ் ஆய்வு தொடர்பான கண்டுபிடிப்புகள் இரு ஆய்வு சுருக்கங்களாகத் தயாரிக்கப்பட்டு ஸ்கொட்லாந்தில் இடம்பெற்ற "4th International Conference of Sports Medicine and Fitness 2018 " என்ற மாநாட்டில் வாய்வழிமூலமான விளக்கக்காட்சியாக வெளியிடப்பட்டது.

இரண்டு புதிய ஆய்வுகள் " Evaluation of School level athlete's knowledge about doping in sports: A cross sectional study " "மற்றும் " Investigating the effect of Sri Lankan Balarista consumption on the results of dope testing" என்ற தலைப்புகளின் கீழ் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன








4th International Conference on
**Sports Medicine and Fitness**
November 14-15, 2018 | Edinburgh, Scotland

**Dietary supplement usage of athletes in a South Asian regional country; Sri Lanka**

**Objective:** Identification of dietary habits and dietary supplement usage pattern among Sri Lankan athletes.

**Methods:** Sri Lankan elite athletes (386) above 18 years old, who belong to 14 sports, were randomly selected for survey study. Data was collected through self-administered structured questionnaire.

**Results:** Dietary supplements are being used by 90% of them, mainly including multivitamins (62.5%), protein (47.4%), creatine (19.0%), rehydration fluids (54.5%) being weight gainers (1.1%) the lowest. Players in all 14 sports showed more than 75% dietary supplement usage while badminton, shooting, wrestling, netball and rugby showed significantly higher usage than karate which has the lowest usage. Supplement usage pattern was observed within geographical variation where six provinces showed more than 90% usage compared to all nine. A significant increase in supplement usage was observed in athletes between 21-35 ages. No significant difference was observed in the supplement usage pattern respect to marital status, gender, occupation of the athletes or highest level of participation. All the participants take carbohydrate rich diet for lunch and 13% cereal for breakfast and 4.2% vegetable and meat rich diet for both breakfast and dinner. Among them 10.9% consumes junk food for dinner. From these players 81.9% using fruits, 54.9% using porridge, 43% using soup and 22.8% using drinks made from medicinal plants show similar tendency in using dietary supplements (more than 90%). Among vegetarians (3.6%) the supplement usage is 85.7% which includes 57.1% protein supplements.

**Conclusion:** While dietary supplement usage is high among Sri Lankan athletes irrespective of sport, dietary habits and social status, their dietary practice needs a change.


4th International Conference on
**Sports Medicine and Fitness**
November 14-15, 2018 | Edinburgh, Scotland

**Knowledge, perception and practice of elite athletes towards dietary supplements in a South Asian Country Sri Lanka**

**Objective:** The main objective is to evaluate knowledge, attitude and belief towards usage of supplements and doping in sports in Sri Lankan athletes.

**Methodology:** A total of 386 elite athletes (33.2% Male and 66.8% Female) from 14 sports categories aged between 18-36 years were randomly selected for a questionnaire based study from January-July 2018.

**Results & Discussion:** Out of 386 athletes 92.7% (P<0.05) believed that the supplements are essential to maintain health and 74.6% believed that it is essential for award winning. Both these perceptions were significantly higher in males than females. Among users 91.3% are aware about prohibited substances in sports showing significance in international players than others. When it comes to practice 76.2% of users are checking the label of supplements for doping substances having significant increase in both international players and those who participated for nutritional workshops. Athletes who participated in nutritional workshops have significantly higher tendency to inform doctor about their sport career while medication. Among supplement users 41.8% are using them to enhance performance in sports and 54% use them to regain energy while 16.5% use without any objective. Among creatine, protein and vitamin consumers respectively 39%.3, 14.3% and 51.8% are not aware about the supplement type that they consume. Among supplement users, 60.5% (P<0.05) of athletes take supplements by themselves without influence of coach, doctor or any other party.

**Conclusion:** Even though athletes are empowered with the required anti-doping knowledge, their knowledge about supplements and actual practice needs to be improved.

## தகவல் தொழிநுட்பப் பிரிவின் முன்னேற்றம் - 2018




### வருடாந்த தடைசெய்யப்பட்ட பட்டியலை பரீட்சிப்பதற்காக விளையாட்டு வீரர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட மென்பொருள் (Android

**Android project**
**DATABASE: Firebase Database with 9000 drug items**
**IDE- Android Studio**

இம் Android Application ஆனது உலக ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தினால் (WADA) தடைசெய்யப்பட்ட பட்டியலுக்கு எதிராக இலங்கையில் கொள்முதல் செய்யப்படும் மருந்துவகைகளின் நிலையை சரிபார்க்க உதவுகிறது. உலக ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தினால் (WADA)விளையாட்டில் ஈடுபடும் மற்றும் ஈடுபடாத சந்தர்ப்பங்களில் தடைசெய்யப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் முறைகள் அடங்கிய பட்டியலானது வெளியிடப்படும். அத்துடன் குறித்த விளையாட்டுப்பிரிவுகளுக்கு குறித்த மருந்துவகைகள் தடைசெய்யப்பட்டுள்ளனவா ? என்பதையும் இப்பட்டியல் சுட்டிக்காட்டுகிறது. அத்துடன் இம் Mobile Android Application ஆனது இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள மருந்து தயாரிப்புகளில் தடைசெய்யப்பட்டுள்ள தயாரிப்புகளின் தடை நிலை பற்றிய தகவல்களை விளையாட்டு வீரர் மற்றும் அவருக்கு உதவுபவர்களுக்கு வழங்குகிறது. இந்த Android Application ஆனது இலங்கை விளையாட்டு வீரர்களுக்கு அவர்களால் உட்கொள்ளப்படும் மருந்துவகைகளின் தடைநிலையை தொடர்ந்து கண்காணிக்க உதவுகிறது.

### சட்ட செயற்பாடுகள்

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனமானது 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களில் ஊக்கமருந்து பாவனைக்கெதிரான இணக்கப்பாட்டுச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.

ஊக்கமருந்து கட்டுப்பாட்டு பரிசோதனைக்காக விளையாட்டு வீரர் ஒருவரிடமிருந்து சிறுநீர் மாதிரியொன்று பெறப்பட்டு அம்மாதிரியானது A மற்றும் B மாதிரிகளாக பிரிக்கப்பட்டு உலக ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். முதலில் A மாதிரியானது பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் ஆய்வுகூட அறிக்கையின்படி விளையாட்டு வீரர் ஒருவர் தடைசெய்யப்பட்ட பொருட்களை பெற்றுக்கொண்டதாக உறுதிசெய்யப்படுமிடத்து B மாதிரி சோதனைக்கு செல்லமுடியும். B மாதிரி சோதனையின்போதும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் பெற்றுக்கொண்டதாக உறுதிசெய்யப்படுமிடத்து அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஒழுக்காற்று குழுவினால் குறித்த விளையாட்டு வீரருக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் அவ்விளையாட்டு வீரருக்கு தெரிவிக்கப்படும். அவ் ஒழுக்காற்றுத் தீர்ப்பானது விளையாட்டு வீரருக்கு கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் மேன்முறையீட்டு குழுவிற்கு மேன்முறையீடு தாக்கல் செய்யமுடியும். மேற்முறையீட்டு குழுவினால் தீர்ப்பு வழங்கப்பட்ட தீர்ப்பு சம்பந்தமாக திருப்பியடையாத சாரார் சுவிற்சலாந்திலுள்ள விளையாட்டுக்கான மத்தியஸ்த நீதிமன்றத்தில் (Court of Arbitration for Sport) மேன்முறையீடு தாக்கல் செய்யமுடியும்.

2018 ஆம் ஆண்டில் 06 விளையாட்டு வீரர்கள் தொடர்பான தடைசெய்யப்பட்ட பொருட்களின் பாவனை உறுதிசெய்யப்பட்டது அவை பின்வருமாறு

| | |
|---|---|
| வலு தூக்குதல் - 2 | ரக்பி - 2 |
| மெய்வல்லுனர் போட்டி- 1 | சைக்கிள் ஓட்டம் - 1 |

இவ் 06 விளையாட்டு வீரர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. 2018 ஆம் ஆண்டில் 04 மேன்முறையீடுகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

## **"15th Asia/Oceania Intergovernmental Ministerial Meeting on Anti-Doping in Sports " மாநாடு**

ஆசியா மற்றும் சமுத்திர வலயத்தைச் சேர்ந்த நாடுகள் பலவற்றின் பங்கேற்புடன் ஆண்டுதோறும் இடம்பெறும் ஆசியா மற்றும் சமுத்திர வலயத்தைச் சேர்ந்த அமைச்சர்களுக்கான மாநாடு இலங்கையில் இடம்பெற்றது. இம்மாநாடு 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் கொழும்பு Kingsbury ஹோட்டலில் வெற்றிகரமாக இடம்பெற்றதுடன் இம்மாநாட்டுக்காக ஆசியா சமுத்திர வலயத்தைச் சேர்ந்த 28 நாடுகளைச் சேரந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் வலய ரீதியில் ஊக்கமருந்து பாவனையை வேரோடு ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் ஊக்கமருந்து பரிசோதனை செயன்முறைகள் சம்பந்தப்பட்ட புதிய நடைமுறைகள் தொடர்பான மேம்படுத்தல்கள் இடம்பெற்றன.

இம்முறை 15வது தடவையாக இடம்பெற்ற இம்மாநாடானது முதனமுறையாக இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்போது எதிர்ப்பார்த்த குறிக்கோள்களை அடைவதற்காக பல்வேறு வழிகளில் இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்கி இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடாத்துவதற்கு உதவிய அனைத்து தரப்பினருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.




கௌரவ அமைச்சர் பைசர் முஸ்தபா அவர்கள் ஆசிய மற்றும் சமுத்திரவலய அமைச்சர்களுக்கான மாநாட்டில் உரையாற்றுகிறார




சமுத்திரவலய அமைச்சர்களுக்கான மாநாட்டில் பங்குபற்றியோரின் குழுப் புகைப்படம்

## **SARADO பணிப்பாளர் சபை மாநாடு**

தெற்காசிய வலய தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து தொடர்பான பணிப்பாளர் சபை மாநாடானது 15வது ஆசியா மற்றும் சமுத்திரத்திர வலயத்தைச் சேர்ந்து அமைச்சர்களுக்காக மாநாட்டுடன் ஒருமித்து இம்முறை இலங்கையில் இடம்பெற்றது. இம்மாநாடானது 2018 ஜுன் மாதம் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் கொழும்பு Kingsbury ஹோட்டலில் வெற்றிகரமாக இடம்பெற்றதுடன் இம்மாநாட்டில் தெற்காசிய வலய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டை ஏற்பாடு செய்த நாடு என்ற ரீதியில் இலங்கை,பங்களாதேஷ்,நேபாளம், பூத்தான் மற்றும் மாலைத்தீவைச் சேரந்த பிரிதிநிதிகள் பங்கேற்ற இம்மாநாட்டில் தெற்காசிய வலயத்தைச்சேர்ந்த நாடுகள், விளையாட்டிலிருந்து ஊக்கமருந்து பாவனையை ஒழிப்பதற்கு இதுரை மேற்கொண்டுள்ள படிமுறைகள் மற்றும் அவை தொடர்பான முன்னிலைப்படுத்துகைகள் குறித்த நாடுகளைச் சேரந்த பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது.



இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் தெற்காசிய வலய ஊக்கமருந்து தடுப்பு நிறுவனங்களின் மாநாட்டில் உரையாற்றுதல்


தெற்காசிய வலய ஊக்கமருந்து தடுப்பு நிறுவனங்களின் மாநாட்டில் பங்குபற்றியவர்களின் குழு புகைப்படம்

## <u>இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்திற்கும் அவுஸ்திரேலிய விளையாட்டு ஊக்கமருந்து தடுப்பு அதிகாரசபைக்கும்(ASADA)இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்</u>

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்திற்கும் அவுஸ்திரேலிய விளையாட்டு ஊக்கமருந்து தடுப்பு அதிகாரசபைக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் 2018.06.08 அன்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்தியடைந்த நாட்டிலிருந்து ஊக்கமருந்து தடுப்பு தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ளலானது இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடொன்றுக்கு, மிகப்பெரிய முதலீடாகும். திறன் விருத்தி மற்றும் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளல் சம்பந்தமாக அவுஸ்திரேலிய விளையாட்டு ஊக்கமருந்து தடுப்பு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு அளப்பறியதாகும்.

அதனடிப்படையில் கல்வி மற்றும் பரிசோதனை, புலனாய்வு, அமுல்படுத்தல் , சட்டம்,ஆராய்ச்சி மற்றும் தகவல் தொழிநுட்பம் போன்ற பிரிவுகள் இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின மூலம் கவனம் செலுத்தப்பட்டுள்ள பிரிவுகளாகும். அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்தியடைந்த நாட்டிலிருந்து ஊக்கமருந்து தடுப்பு தொடர்பான அறிவைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் மேம்படுத்துதல் இலங்கையைப் பொருத்தவரையில் அறிய சந்தர்ப்பமாகும்.



இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் அவுஸ்திரேலிய விளையாட்டு ஊக்கமருந்து தடுப்பு அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடல்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தில் பங்குபற்றியோரின் குழு வரைப்படம்
இடமிருந்து வலமாக:
திரு. டேவிட் ஷார்ப் – பிரதம நிறைவேற்று அதிகாரி ASADA
வைத்தியர் சீவலி ஜயவிக்ரம - பணிப்பாளர் நாயகம் SLADA
பேராசிரியர் அர்ஜுன டி சில்வா – தலைவர் SLADA
Sir கிரேக் ரீடி – உலக ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் WADA
திரு.ஒலிவர் நிக்லி - பணிப்பாளர் நாயகம் WADA (World Anti-Doping Agency)
திரு. ரொபர்ட் கோலர் - பிரதி பணிப்பாளர் நாயகம் WADA



## ஊக்கமருந்து தடுப்பு தொடர்பான வெளிநாட்டு நிகழ்வுகள் - 2018

பரிசோதனை மற்றும் கல்வி,ஆராய்ச்சி,சட்டம், தகவல் தொழிநுட்பம் போன்ற துறைகளுக்குப் பொறுப்பான SLADA வின் உத்தியோகத்தர்கள் பின்வரும் கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் பட்டறைகளில் பங்கேற்றனர்

- "INADO Workshop & WADA ADO Symposium"
- "WADA ADO Symposium"
- 21 ஆவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள்
- DCO Training Programme
- "KADA Seminar 2018"
- "SEARADO Anti-Doping Education Trainers Workshop"
- "Second WADA Global Education Conference"
- "Doping Control Officer Conference"
- "WADA Athlete Biological Passport Symposium"
- "International Anti-Doping Seminar in Asia & Oceania 2018"

## 2018 ஆம் ஆண்டின் இலக்குகள் மற்றும் நோக்கு

- இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்திற்காக சகல வகைகளிலும் பூர்த்தி செய்யப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடமொன்று நிர்மாணிக்கப்படுகின்றது. அனைத்து கட்டுமானப்பணிகளும் இவ்வாண்டின் இறுதிக்குள் பூர்த்திசெய்யப்படவுள்ளது.இவ் ஆய்வுகூடத்தில் 2019 ஆம் ஆண்டில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் ஆராய்ச்சி தொடர்பான ஆவணங்களை தயாரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
